MCOP 24/2016

ம.சா. 1 ரகுபதி த/பெ கோவிந்தராஜ்

நாள் 20.06.2025

**குறுக்கு விசாரணை**

1. விபத்தில் இறந்து போன பாத்திமா ராணி என் மனைவி என்றால் சரிதான். 2ம் மனுதாரர் சுஜி பிரியா எங்களது மகள் ஆவார். 3ம் மனுதாரர் எங்களது மகன் ஆவார். 2 மற்றும் 3 மனுதாரர்களுக்கு விபத்து நடந்த சமயத்தில் திருமணம் ஆகவில்லை தற்போது இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. அவர்கள் திருமணம் ஆகி சுஜி பிரியா சென்னையில் உள்ளார், 3ம் மனுதாரரும் சென்னையில் தான் இருக்கிறார். விபத்து நடந்த தேதி சொல்ல முடியுமா என்றால் 28.02.2016 ஆகும். இருசக்கர வாகனம் TN26AT0489 யாருடைய வாகனம் என்றால் என்னுடையது தான். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை யார் ஓட்டியது என்றால் எனது மகள் சுஜிபிரியா ஓட்டினார். விபத்து சமயத்தில் சுஜிபிரியாவுக்கு இரு சக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் இருந்ததா என்றால் இருந்தது இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் எனது மகளுக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் இருந்திருந்தால் வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் இல்லை என்பதால் தான் வழக்கில் தாக்கல் செய்ய வில்லை என்றாலும் சரியல்ல. விபத்து சம்பவம் குறித்து நேரடியாக எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் பாத்திமா ராணி ஆரணி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வந்தார். எனது மனைவி செவிலியராக பணிபுரிந்ததற்கான அடையாள அட்டை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. ம.சா.ஆ.6 ஆன சம்பள பட்டியலில் பிடித்தம் போக வாங்கும் சம்பளம் ரூ.42,050/- என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மகளோ, மனைவியோ தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அரசு போக்குவரத்தின் ஓட்டுநர் சாலை விதிகளை கடைபிடித்தும் சரியான முறையில் வாகனத்தை இயக்கினார் என்றால் சரியல்ல. எனது மனைவியும் மகளும் தேவிகாபுரத்தில் இருந்து ஆரணி நோக்கியும் அரசு பேருந்து ஆரணியில் இருந்து தேவிகாபுரம் சென்றது என்றால் சரிதான். எனது மகள் இருசக்கர வாகனம் ஓட்டத்தெரியாமல் நிலை தடுமாறி அரசுப்பேருந்தில் மோதிவிட்டார் என்றால் சரியல்ல. எனது மகளை விட எனது மனைவி கூடுதல் எடையாக இருந்ததால் நிலை தடுமாறி விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக என் மகள் புகார் கொடுத்தார். எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மனிதாபிமானம் காரணமாக அடிபபட்ட என் மனைவியை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார் என்றாலும் எங்கள் தரப்பில் அவருக்கு எதிராக பொய்யான புகார் அளிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. விபத்து எனது மகளின் அஜாக்கரதையால் ஏற்பட்டது என்றால் அரசுப் போக்குவரத்து ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.